भारत का राजपत्र

# The Gazette of India

இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

**சிறப்பிதழ்**

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

*பகுதி XV பிரிவு 1*

प्राधिकार प्राकारित

**PUBLISHED BY AUTHORITY**

**அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது**

नई दिल्ली, सोमवार, 6 मार्च, 2000/1922 सका

New Delhi, Monday, 6th March 2000/1922 Saka

*புது தில்லி, திங்கட்கிழமை, 6 மார்ச் 2000/1922 சக*


**Ministry of Law, Justice and Company Affairs**
**(Legislative Department)**
**New Delhi**

**சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்**
**(சட்டமியற்றுத் துறை),**
**புது தில்லி**

The Translation in Tamil of the Transfer of Property Act, 1882 (4 of 1882). The Dissolution of Muslim Marriage Act, 1939 (8 of 1939) The Foreign Contribution (Regulation) Act, 1976 (49 of 1976), The Companies (Donations to National Funds) Act, 1951 (54 of 1951), The Negotiable Instruments Act, 1881 (26 of 1881), The Company Secretaries Act, 1980 (56 of 1980), are hereby published under the Authoritative Texts thereof in Tamil under clause (a) of Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

சொத்து உரிமை மாற்றச் சட்டம், 1882 (4/1882), முஸ்லீம் மண உறவு தீர்த்தல் சட்டம், 1939 (8/1939), அயல்நாட்டு நன்கொடை (ஒழுங்குமுறைப் படுத்துதல்) சட்டம், 1976 (49/1976), நிறுமங்கள் (தேசீய நிதியங்களுக்கு நன்கொடைகள் கொடுத்தல்) சட்டம், 1951 (54/1951), மாற்று முறையாவணங்கள் சட்டம், 1881 (26/1881), நிறுமச் செயலாளர்கள் சட்டம், 1980 (56/1980) ஆகியவற்றின் தமிழ்மொழி பெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன் பிரிவு 2 இன் கூறு 'அ' வின் படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் எனக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[Price: Rs.111.00]

# அயல்நாட்டு நன்கொடை (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம், 1976

## (சட்ட எண் 49/1976)

[1976 மார்ச்சு 31]

நாடாளுமன்ற நிறுவனங்களும், அரசியல் கழகங்களும், கல்வி சார்ந்த மற்றும் பிற தன்விருப்பாட்சி அமைப்புகளும், அதோடுகூட தேசிய வாழ்வின் முக்கியத்துறைகளில் பணியாற்றும் தனிநபர்களும், இறையாண்மை மக்களாட்சிக் குடியரசின் பயனெறிகளுக்கு இணங்கிய முறையில் செயற்பணி புரியலாம் என்பதை உறுதி செய்யும் நோக்குடன், குறிப்பிட்ட நபர்களால் அல்லது கழகங்களால் அயல்நாட்டு நன்கொடை அல்லது அயல்நாட்டு விருந்தோம்பல் ஏற்கப்படுவதையும் பயன்படுத்தப்படுவதையும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும், அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்குச் சார்வுறுவான பொருட்பாடுகளுக்காகவுமான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் இருபத்தேழாம் ஆண்டில் நாடாளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

### அத்தியாயம் I

### முன்னுரை

குறுந்தலைப்பு, அளாவுகை, பொருந்துதல் மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், அயல்நாட்டு நன்கொடை (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம், 1976 என்று வழங்கப்பெறும்.

(2) இது, இந்தியா முழுவதையும் அளாவிநிற்கும்; மற்றும் இது—

(அ) இந்தியாவிற்கு வெளியேயுள்ள, இந்தியக் குடிமக்களுக்கு, மற்றும்

(ஆ) இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட அல்லது கூட்டுருமமாகப் பதிவு செய்யப்பட்ட நிறுமங்களின் அல்லது கூட்டுருமக் குழுமங்களின் இந்தியாவிற்கு வெளியேயுள்ள இணையகங்களுக்கும் துணையகங்களின் கிளைகளுக்கும்,

கூடப் பொருந்தும்.

(3) இது, மைய அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் தேதியன்று செல்லாற்றல் பெறும்.

பொருள் வரையறைகள்.

2. (1) இந்தச்சட்டத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி—

(அ) "கழகம்" என்பது, இந்தியாவில் ஓர் அலுவலகத்தைக் கொண்டிருக்கிற, கூட்டுருமமாகப் பதிவு செய்யப்பட்டதானாலும் அல்லது இல்லையென்றாலும், தனி நபர்களின் கழகம் என்று பொருள்படும்; மற்றும் சங்கங்கள் பதிவு செய்தல் சட்டம், 1860 இன்படி பதிவு செய்யப்பட்டதானாலும் அல்லது இல்லையென்றாலும் ஒரு சங்கத்தையும், வேறெந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும் பிற அமைப்பு எதனையும் உள்ளடக்கும்;

(ஆ) "தேர்தலுக்கான வேட்பாளர்" என்பது, சட்டமன்றம் எதற்குமான தேர்தலுக்காக ஒரு வேட்பாளராக உரியவாறு பெயர் குறிக்கப்பட்டுள்ள ஒரு நபர் என்று பொருள்படும்;

(இ) "அயல்நாட்டு நன்கொடை" என்பது, அயல்நாட்டு ஆதாரம் (Foreign source) எதனாலும்"—

(i) ஒரு நபருக்கு அவரது சொந்தப் பயனுக்காகக் கொடையாக அளிக்கப்பட்ட ஒரு பொருளாக இல்லாதிருந்தது, இந்தியாவில் அத்தகைய பொருளின் நிலவர மதிப்பு அது கொடையாக அளிக்கப்படும் தேதியில் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாது இருக்குமாயின், அந்தப் பொருள் எதுவும்,